# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 170/2025 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : சந்திரசேகர் ( புகார்தாரர்) |
| Father's Name | : ராஜேந்திரன் |
| Village | : உலுப்பகுடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 22/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சிலை செதுக்கும் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் என் அப்பா ஆவார். இவ்வழக்கின் எதிரி ஸ்ரீதர் என்பவரை நான் சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன். கடந்த 28.04.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் உலுப்பகுடியில் உள்ள கே.கே.கறிக்கடையில் சாப்பிட செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது, வேலை முடித்துவிட்டு ஷேர் ஆட்டோவில் வந்த என் அப்பா ராஜேந்திரன் அவரும் சாப்பிடுவதாக கூறி சாலையின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 59 DX 2404 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அவருக்கு முன்னால் வந்து கொண்டிருந்த கார் ஒன்றை முந்தி

செல்வதற்காக வேகமாக வந்து என் அப்பாவின் மீது மோதிவிட்டார். அதில் என் அப்பா தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்ததில் வலது கால், வலது கை மற்றும் வலது பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சுயநினைவை இழந்துவிட்டார். பின்னர் அவசர ஊர்தியை வரவழைத்து நத்தம் அரசு மருத்துவமனைக்கு என் அப்பாவை கொண்டு சென்றபோது இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரும் எங்களுடன் அவசர ஊர்தியில் வந்தார். அவர் பெயர் ஸ்ரீதர் என்றும் அவர் மேலூர் அருகே காத்தப்பட்டி என்ற ஊரை சேர்ந்தவர் என்றும் கூறினார். மருத்துவமனையில் என் அப்பாவை பரிசோதித்து கொண்டிருந்தபோது என் அப்பா இறந்துவிட்டார். என் அப்பாவை பிணவறையில் வைத்துவிட்டு உறவினர்களுக்கு தகவல் சொன்ன பின்னர் மறுநாள் காலையில் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்தபோது என்னுடன் சித்திரை பெருமாள் என்பவரும், பழனியப்பன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு <u>அ.த.சா.ஆ.1</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Aafreen Begama M.Com., LLM.,

Digitally signed by Aafreen Begama M.Com., LLM.,
Date: 2026.04.28 12:01:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.170/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 170/2025 LW- 2 PW- 2

Name : சித்திரை பெருமாள் ( கண்ணுற்ற சாட்சி)

Father's Name : வெள்ளையன்

Village : பாலப்பநாயக்கன்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 26/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். இவ்வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் என்பவரை பார்த்திருக்கிறேன். இவ்வழக்கில் இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபரை நான் பார்த்திருக்கிறேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் பெயர் ஸ்ரீதர். கடந்த 28.04.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் உலுப்பகுடியில் உள்ள கோழிக்கறிக்கடையின் முன்பாக நின்று தெரிந்தவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அ.சா.1 முன்புறம் வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்புறமாக இறந்துபோன அவரது அப்பா நடந்து வந்து கொண்டிருந்தபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் ஒன்றை முந்தி செல்வதற்காக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஏறி வந்து

அ.சா.1ன் அப்பாவின் மீது மோதிவிட்டார். அதில் அவருக்கு கை, கால்கள் நொறுங்கி கிடந்தார். அவரை அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவர் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 59  2404 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Aafreen Begama M.Com., LLM.,

Digitally signed by Aafreen Begama M.Com., LLM.,
Date: 2026.04.28 12:01:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.170/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 170/2025 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : பழனியப்பன் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's Name | : மெய்யர் |
| Village | : உலுப்பகுடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். இவ்வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் என்பவரை பார்த்திருக்கிறேன். இவ்வழக்கில் இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபரை நான் பார்த்திருக்கிறேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். கடந்த 28.04.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் உலுப்பகுடியில் உள்ள கோழிக்கறிக்கடையின் அருகில் உள்ள ஹோட்டல் முன்பாக நின்று கொண்டிருந்தபோது, ராஜேந்திரன் என்பவர் சாலையின் தெற்குபுறத்தில் ஆட்டோவில் இருந்து இறங்கி வடக்கு பகுதிக்கு வந்துவிட்டார். அப்போது கிழக்கிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு காரை அதே திசையில் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் முந்திச் செல்வதற்காக

வேகமாக வந்து சாலையின் மறு பகுதியில் ஏறி ராஜேந்திரன் என்பவர் மீது மோதிவிட்டார். அதில் அவருக்கு வலது பக்க காலில் பலத்த காயம் ஏற்பட்டு சீரியசாக இருந்தார். அப்போது அங்கு வந்த 108 அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN59 DX 2404 ஆகும். அதை ஓட்டி வந்த நபர் மேலூர்காரர் என்று சொன்னார்கள். மறுநாள் நான் நத்தம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றிருந்தேன். அப்போது நான் புகார் மனுவில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Aafreen Begama M.Com., LLM.,

Digitally signed by Aafreen Begama M.Com., LLM.,
Date: 2026.04.28 12:01:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்